1973 ஆகஸ்ட் 13]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அண்மையிலேதான் அங்கே பிரசவத்திற்கும் அறுவை சிகிச்சைக்குமாக 30 படுக்கை கொண்ட வார்டு ரூ. 2,95,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் குடும்ப நலத் திட்ட அடிப்படையில் அறுவை சிகிச்சைக்கு ஒரு வார்டு 20 படுக்கையோடு ரூ. 2,00,000 செலவில் கட்டி முடிக்கப் பட்டிருக்கிறது. அதேபோல் தோல் வியாதிக்கும்; இன உறவு காரணமாக ஏற்படுகிற வியாதிக்கும், 'டெட்டனஸ்' வியாதிக்கும் அதேபோல் குழந்தைகளுக்கான சிகிச்சைத் தேவைகளுக்காக 40 படுக்கைகளோடு ரூ. 1,65,000 செலவில் ஒரு வார்டு கட்டப் படுகிறது. அநேகமாக கட்டப்பட்டிருக்கும். இதற்கான சுற்றுச் சுவர் ரூ. 60,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டு வருகிறது. மேலும் பல பகுதிகளை விரிவாக்க ஆலோசனை இருக்கிறது. நிதி வசதிக்கேற்ப அவ்வப்போது விரிவாக்கப்படும்.

*106 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடந்தை அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கும்பகோணம் அரசு மருத்துவமனையில் ரூ. 1,81,000 செலவில் 32 படுக்கைகள் கொண்ட ஒரு பகுதி கட்டவும், ரூ. 30,000 செலவில், காது, மூக்கு, தொண்டைப் பகுதிக்காக ஒரு சிகிச்சைப் பகுதி கட்டிடம் கட்டவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ் வேலைகள், பொதுப்பணித் துறையினரால் விரைவில் தொடங்கப்படும்.

*Post Graduate course in Orthopaedics*

* 107 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether Post-Graduate course in Orpthopaedics is being conducted in the Medical Colleges in this State ; and

(*b*) if so, the details thereof?